00889

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**கல்விப்பீடம்**

**இரண்டாம், மூன்றாம் நிலை கல்வித்துறை**

**பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022**

**இறுதிப் பரீட்சை - 2023**

**STP8207/STP8307/ESP2107 – கலைத்திட்ட கோட்பாடும் நடைமுறையும்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

---

**திகதி:- 25.11.2023** **நேரம்: மு.ப. 09.30 - மு.ப 12.30**

---

- பகுதி **I** இல் உள்ள அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி – I

1. கலைத்திட்ட கற்கைகள் ஆசிரியர்களுக்கு ஏன் முக்கியம் என்பதைக் காட்ட நான்கு (04) காரணங்களை எழுதுக.
2. கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரி என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக.
3. இரண்டு (02) உதாரணங்களை மேற்கோள் காட்டி முறையில் கலைத்திட்டம் (Informal Curriculum) என்றால் என்ன என்பதை விளக்குக.
4. கலைத்திட்ட அமைப்பில் நான்கு (04) கோலங்கள் அல்லது அணுகுமுறைகளை பட்டியலிட்டு, அவற்றில் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக.
5. “பாடசாலை கலைத்திட்டத்தை உருவாக்கும் போது உளவியல் அடிப்படைகளை கருத்தில் கொள்ள வேண்டும்” சுருக்கமாக ஆராய்க.
6. கலைத்திட்டத்தை நிர்வகிப்பதில் பாடசாலை அதிபரின் வகிபங்கின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக ஆராய்க.
7. “கற்றலுக்காக கற்றல்” தேர்ச்சியினை உறுதிப்படுத்த ஒரு ஆசிரியரால் செய்யக்கூடிய மூன்று (03) தலையீடுகளைக் குறிப்பிடுக.
8. 1981 இல் கல்வி வெள்ளை அறிக்கை மூலம் முன்வைக்கப்பட்ட இரண்டு (02) கலைத்திட்ட சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக.

**(5 x 8 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.

**i.** கலைத்திட்டம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு (02) வரைவிலக்கணங்களைக் குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

**ii.** அந்த வரைவிலக்கணங்களை பகுப்பாய்வு செய்து, அந்த வரைவிலக்கணங்களுக்கு ஏற்ப ஒரு கலைத்திட்டத்தின் முக்கிய பண்புகளை அடையாளம் காண்க. **(06 புள்ளிகள்)**

**iii.** அதற்கேற்ப கலைத்திட்டம் என்ற பதத்திற்கு உங்கள் சொந்த வரைவிலக்கணத்தை உருவாக்குக. **(04 புள்ளிகள்)**

**iv.** உங்கள் வரைவிலக்கணத்திற்கேற்ப கலைத்திட்டத்தை செயல்படுத்துவதில் நீங்கள் எதிர்கொள்ளும் மூன்று (03) சவால்களை அடையாளம் காண்க. **(06 புள்ளிகள்)**

10.

**i.** கலைத்திட்டத்தின் நோக்கங்களைத் தீர்மானிப்பதற்கான மூலாதாரங்களை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக. **(10 புள்ளிகள்)**

**ii.** ஒரு கலைத்திட்டத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை நிர்ணயிக்கும் செயல்முறையை விளக்குக. **(06 புள்ளிகள்)**

**iii.** 1998 இல் கல்வி சீர்திருத்தங்களின் **இரண்டு** (02) இலக்குகளைக் குறிப்பிட்டு உதாரணங்களுடன் ஆராய்க. **(04 புள்ளிகள்)**

11.

**i.** டைலரின் கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரியை வரைந்து விளக்குக. **(06 புள்ளிகள்)**

**ii.** டைலரின் கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரியில் உள்ள **மூன்று** (03) பலவீனங்களைக் குறிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

**iii.** வீலரின் கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரியை விளக்கி, டைலரின் மாதிரியில் உள்ள பலவீனங்கள் வீலரின் மாதிரியில் எவ்வாறு சரி செய்யப்பட்டுள்ளன என்பதை விளக்குக. **(08 புள்ளிகள்)**

12.

**i.** இணைப்பாடவிதான நடவடிக்கைகள் (Co – Curricular Activities) என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக. **(05 புள்ளிகள்)**

**ii.** மாணவர்களின் மொத்த விருத்திக்கு இணைப்பாடவிதான நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

**iii.** இணைப்பாடவிதான நடவடிக்கைகளில் மாணவர் பங்கேற்பை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய **மூன்று** (03) உத்திகளை விளக்குக. **(09 புள்ளிகள்)**

13.

**i.** "சமூக மாற்றம்" என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக. **(04 புள்ளிகள்)**

**ii.** பாடசாலைக் கலைத்திட்டத்தின் நோக்கமாக சமூக தேவைகளை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை பரீட்சிக்க. **(08 புள்ளிகள்)**

**iii.** இலங்கையில் பல ஆண்டுகளாக முன்வைக்கப்பட்ட பல்வேறு கல்விச் சீர்திருத்தங்களில் இருந்து **நான்கு** (04) பொருத்தமான உதாரணங்களை வழங்குவதன் மூலம் சமூக மாற்றங்கள் எவ்வாறு பாடசாலை கலைத்திட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதைப் பற்றி ஆராய்க. **(08 புள்ளிகள்)**

14.

**i.** கலைத்திட்ட மதிப்பீடு என்றால் என்ன என்பதை விளக்குக. **(03 புள்ளிகள்)**

**ii.** உங்கள் பாடசாலைச் சூழலில் கலைத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் / கூறு தொடர்பான பொருத்தமான உதாரணங்களை மேற்கோள் காட்டி, டைலரின் குறிக்கோள் அடிப்படையிலான கலைத்திட்ட மதிப்பீட்டு மாதிரியில் உள்ள படிகளைப் பற்றி ஆராய்க. **(14 புள்ளிகள்)**

**iii.** கலைத்திட்ட மதிப்பீட்டாளரிடம் இருக்க வேண்டிய **ஐந்து** (05) குணங்களைச் சுருக்கமாக மதிப்பிடுக. **(03 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -